A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 20 / 2024**

திரு.S.ராஜ்குமார்
எண்.13/84, கொடுப்பைக்குழி,
கட்டிமாங்கோடு அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629801.

………மேல்முறையீட்டாளர்
(திரு.S.ராஜ்குமார்)

எதிர்

செயற்பொறியாளர்/ இ&ப/தக்கலை,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நாகர்கோவில் பார்வதிபுரம்,
நாகர்கோவில் – 629 003.

. . . எதிர்மனுதாரர்
(திரு.K.சங்கரநாராயணபிள்ளை,
செயற்பொறியாளர்/இ.கா./தக்கலை)

**மனு பெறப்பட்ட நாள்: 25-03-2024**

**கேட்புரை நாள்: 16-05-2024**

**ஆணை நாள்: 23-05-2024**

25.03.2024 அன்று பெறப்பட்ட திரு.S.ராஜ்குமார், எண்.13/84, கொடுப்பைக்குழி, கட்டிமாங்கோடு அஞ்சல் , கன்னியாகுமரி மாவட்டம் – 629801 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 20/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது . மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 16.05.2024 அன்று நடைபெற்றது . மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் , எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந் து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை

மேல்முறையீட்டாளர் தனது விண்ணப்ப எண் .2000715408231247க்கு சாதாரண விவசாய மின்இணைப்பு கோரி விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் திரு.S.ராஜ்குமார் தனது விண்ணப்ப எண் 2000715408231247 வேளாண் மின்இணைப்பு பெற தகுதியானது எனவும் , ஆனால் தவறுதலாக கையாளப்பட்டு இரத்து செய்யப்பட்டதாகவும் , ஆகவே உடனடியாக விவசாய மின்இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் உதவி மின்பொறியாளர் /இ&ப/ /வெள்ளிச்சந்தை கள ஆய்வு மேற்கொண்டபோது மேல்முறையீட்டாளருக்கு 50 சென்ட் பாசன நிலம் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் இல் லை என்பதால் வேறொருவரின் நிலம் அவரது நிலத்திற்கு நடுவே காணப்படுவதால் விவசாய மின் இணைப்பு கோரி ய மேல்முறையீட்டாளர் online விண்ணப்பத்தை ரத்து செய்து அத்தகவலை மேல்முறையீட்டாளருக்கு நேரிடையாக தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தனது விண்ணப்ப எண் .2000715408231247க்கு சாதாரண விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் 18.12.2023 அன்று கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் , கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம் 23.02.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 மன்றத்தின் தீர்வு :

**3.1** கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம் , மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 23.02.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது . அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*மனுதாரர் மற்றும் மின்உரிமையாளரின் வாதங்களை கேட்டறிந்ததில் மனுதாரர் மனு தொடர்பாக ஆவணங்கள் இருப்பின் வழங்கலாம் என்றும் அதன்படி மனுதாரர் 3 தாள்கள் தரப்பட்டுள்ளது. எனினும் Tamilnadu Electricity Distribution Codes and Sub Regulations 29 (2) (b) – ல் தெரிவிக்கப்பட்டுள்ள*

> *"Within a survey field number or in a sub-divided field number, a person shall be given one agriculturai service connection to each well/bore well subject to the condition that the wells/bore wells are independent and physically separated from each other and the minimum extent of land to be irrigated from each well/bore well shall be 0.5 acre". –ன்படி*

*தொடர்ச்சியாக 50 சென்டிற்கு குறைவாக உள்ள விவசாய நிலத்திற்கு மின்னிணைப்பு வழங்க இயலாததால் விணணப்பம் ரத்து செய்யப்பட்டது. எனவே இம்மனு மீத நடவடிக்கை தேவையில்லை என இம்மன்றம் கருதுகிறது.*

***ஆணை :***
*மனுதாரர் மனு தொடர்பாக Tamilnadu Electricity Distribution Codes and Sub Regulations 29 (2) (b) –ல் குறிப்பிட்டுள்ள வாரிய விதிகளின்படி குறைந்த பட்சம் 50 சென்டு பாசன நிலம் தேவை என்பதால் மின்னிணைப்பு வழங்க வழிவகை இல்லை என இம்மனு முடித்து வைக்கப்படுகிறது.*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.05.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு.S.ராஜ்குமார் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு.K.சங்கரநாராயணபிள்ளை, செயற்பொறியாளர்/இ.கா./தக்கலை, கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது . குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடி க்கை சம்ப ந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

5.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய விண்ணப்பம் (விண்ணப்ப எண் 2000715408231247) வேளாண் மின்சாரம் பெற தகுதியானது என்றும் மேலும் தான் விண்ணப்பிக்கும் போது தேவையான ஆவணங்களை சமர்பித்து உள்ளதாகவும், ஆனாலும் விண்ணப்பத்தை சரியாக பரிசீலனை செய்யாமல், விதிகளுக்கு உட்படாமல், தவறான காரணம் கூறி நிராகரித்து உள்ளதாகவும், ஆகவே தனது விண்ணப்பத்தை (2000715408231247) மறுபரிசீலனை செய்து உடனே மின்சாரம் வழங்க உத்தரவிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

5.2 மேல்முறையீட்டாளர் தனது விண்ணப்பத்தை (விண்ணப்ப எண் 2000715408231247) சரியாக கையாளாமல் தவறான காரணம் கூறி நிராகரித்ததால் தேவையற்ற மன உளைச்சல், கால விரயம் மற்றும் பயிர்கள் பாதிக்கப்பட்டு உள்ளது இதனால் ஏற்பட்ட பாதிப்பை சரி செய்ய இயலுமா? இதற்கு என்ன தீர்வு கூறுங்கள் என்று தெரிவித்துள்ளார்.

5.3 மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆணையில் tamilnadu electricity distribution code and sub regulations 29(2)(b)ல் குறிப்பிட்டு உள்ள விதிகளின் படி குறைந்த பட்சம் 50 சென்ட் பாசன நிலம் தேவை என்பதால் மின் இணைப்பு வழங்க வழிவகை இல்லை என்று கூறப்பட்டுள்ளதாகவும், தனது விவசாய நிலத்தின் மொத்த அளவு 75 சென்ட் உள்ளதாகவும், மேற்கூறிய விதியின்படி குறைந்த பட்சம் 50 சென்ட் பாசன நிலம் தேவை எனவும், அதில் எந்த ஒரு இடத்திலும் நிலம் தொடர்ச்சியாக தான் இருக்க வேண்டும் என்று கூறப்படவில்லை எனவும், ஆகவே தனது விண்ணப்பம் மேற்கூறிய விதியின்படி வேளாண் மின்சாரம் பெற தகுதியானது எனவும், மன்றத்தின் ஆணை மேற்கூறிய விதிகளுக்கு உட்படாமல் உள்ளதாகவும், ஆகவே உடனே மின்சாரம் வழங்க உத்தரவிட வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேல்முறையீட்டாளர் தனது விண்ணப்பம் தேதி 20-08-2023ல் பதிவு செய்துள்ளதாகவும், அதனை முழுமையாக பரிசீலனை செய்யாமல், கள ஆய்வு

செய்யப்பட்டதன் விவரம் பதிவு செய்யாமல், என்ன நடவடிக்கை எடுக்கபட்டது மற்றும் எந்த காரணத்திற்காக ரத்து செய்யப்படுகிறது என்று பதிவு செய்யாமல், விதிகளுக்கு உட்படாமல் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் ஆதாரமாக ஆன்லைன் விண்ணப்பத்தின் நகல் மற்றும் RTI மனுவின் (தேதி 7-12-2023) கேள்வி மற்றும் பதிலின் (தேதி 29-02-2023) இணைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5.5 மேல்முறையீட்டாளர் எதற்காக தனது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது என்று தெரிய RTI மனு செய்ததாகவும், அதற்கு பதிலாக TNERCன் செய்தி வெளியீடு PR.NO:1/2020 dt:10.09.2020 மேற்கோள் காட்டி, 50 சென்ட் விவசாய நிலம் ஒரே இடத்தில் இல்லை என்று ரத்து செய்யப்பட்டதாக காரணம் கூறப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

5.6 மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறை தீர்ப்பு மன்றத்தில் 18-12-2023ல் புகார் அளித்ததாகவும், அதன் ஆணையில் மேற்கூறிய RTI ல் குறிப்பிட்ட PR.NO: 1/2020 dt:10.09.2020 காரணம் கூறாமல் புதிதாக tamilnadu electricity distribution code and sub regulations 29(2)(b) ல் குறிப்பிட்டுள்ள விதிகளின் படி குறைந்த பட்சம் 50 சென்ட் பாசன நிலம் இல்லை என்றும் இது எப்படி சாத்தியம்? விண்ணப்பம் ரத்து செய்யும் போது எந்த ஒரு காரணமும் பதிவு செய்யபடவில்லை, RTI மனுவிற்கு ஒரு காரணம் பதிலாக, ஆணையில் வேறு ஒரு காரணம் இதற்காக தான் காரணம் பதிவு செய்யப்படாமல் விண்ணப்பம் ரத்து செய்யப்படுகிறதா? இப்படி தான் காரணம் நேரத்திற்கு நேரம் இடத்திற்கு இடம் மாறுபடுமா என்று தெரிவித்துள்ளார்.

5.7 RTIல் குறிப்பிட்டபடி TNERCன் PR.NO:1/2020 dt:10.09.2020 மற்றும் ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதியை பார்த்தால் தெரியும் அதில் எந்த ஒரு இடத்திலும் நிலம் தொடர்ச்சியாக தான் இருக்க வேண்டும் என்று கூறப்படவில்லை எனவும், அதில் குறைந்த பட்சம் 50 சென்ட் பாசன நிலம் தேவை என்று தான் உள்ளது எனவும், ஆகவே வேளாண் மின்சாரம் வழங்க உத்தரவிட வேண்டுகிறேன் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>

6.1 திரு.இராஜகுமார், அவர்கள் விவசாய மின் இணைப்பு வேண்டி Online –ல் விண்ணப்பித்து இருந்ததாகவும், அது தொடர்பாக இளநிலை பொறியாளர் /வினியோகம் / வெள்ளிச்சந்தை அவர்கள் களஆய்வு மேற்கொண்டபோது மனுதாரருக்கு 50 cent பாசன நிலம் தொடர்ச்சியாக இடத்தில் இல்லை எனவும் வேறொருவரின் நிலம் அவரது நிலத்திற்கு நடுவே காணப்படுவதாகவும் ஆய்வு அறிக்கை சமர்பிக்கப்பட்டதால் (தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தால் வெளியிடப்பட்ட PR.No:1/2020 DT:10.09.2020) வாரிய விதிமுறைகளின்படி விவசாய மின்னிணைப்பு பெற தகுதியில்லாத காரணத்தினால் அவரது Online விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுதாரர் வெள்ளிச்சந்தை பிரிவு அலுவலகத்தில் வந்து மனு குறித்து கேட்டதாகவும், அப்போது இளநிலை பொறியாளர் /வினியோகம் / வெள்ளிச்சந்தை அவர்கள் மின் நுகர்வோரிடம் விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு வாரிய விதிமுறைப்படி ஒரே இடத்தில் குறைந்தது 50 சென்ட் பாசன நிலம் அல்லது அதற்கு மேல் இருந்தால் மட்டுமே விவசாய மின்னிணைப்பு விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவித்ததாகவும், ஆனால் திரு.இராஜகுமார், அவர்களுக்கு 40 சென்ட் நிலம் ஒரு இடத்திலும் மற்றொரு இடத்தில் 35 சென்ட் நிலமும் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 இந்த இரண்டு இடத்திற்கும் இடையில் வேறொரு நபருடைய நிலம் இருப்பதாக தெரிவித்துள்ளதாகவும், ஆகவே தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தால் வெளியிடப்பட்ட PR.No:1/2020 DT:10.09.2020–ன் படி விவசாய மின்னிணைப்பு பெற குறைந்தது 50 சென்ட் பாசன விவசாய நிலம் ஒரே இடத்தில் இருக்க வேண்டும் எனவும், மேலும் மின் நுகர்வோரின் மனுவானது சரியாக பரிசீலனை செய்து ஒரே இடத்தில் தொடர்ச்சியாக 50 சென்ட் பாசன நிலம் இல்லாத காரணத்தால் மனு ரத்து செய்யப்பட்டது என்று விளக்கமளிக்கப்பட்டதாகவும், மேலும் மனுதாரர் தகவலறியும் உரிமை சட்டம் 2005 –ன் கீழ் தன்னுடைய மனு ஏன் ரத்து செய்யப்பட்டது என்று கோரியதற்கு ஒரே இடத்தில் தொடர்ச்சியாக 50 சென்ட் இல்லாததால் தான் ரத்து

செய்யப்பட்டுள்ளது என மனுதாரருக்கு பதில் அனுப்பப்பட்டது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் திரு. ராஜகுமார் அவர்கள் 18.12.2023 அன்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டத்திற்கு விவசாய மின்னிணைப்பு ரத்து செய்யப்பட்டது தொடர்பாக அளித்த புகார் ஏற்றுக்கொள்ளப்பட்டு பதிவு செய்யப்பட்டதாகவும், அந்த மனுவின்மீது நடவடிக்கை மேற்கொண்டு 20.01.2023 அன்று கேட்புரை நடத்தப்பட்டு. இதில் மனுதாரர் கலந்துகொண்டார் மனுதாரரின் மனு எதிர்மனுதாரரின் பதிலுரை பதிவு செய்யப்பட்டு ஆவணங்கள் அனைத்தையும் ஆராய்ந்து கீழ்கண்ட ஆணை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் வழங்கப்பட்டது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

<u>மனுதாரரின் கோரிக்கை:</u>

மனுதாரர் விவசாய மின்னிணைப்பு பெற தகுதியான ஆவணங்களை சமர்பித்த விண்ணப்ப எண் 2000715408231247 கொண்ட விண்ணப்பத்தை சரியாக பரிசீலணை செய்யாமல் தவறான காரணம் கூறி நிராகரித்துள்ளனர் என்றும் அதனால் மனஉளைச்சல் காலவிரயம் மற்றும் பயிர்கள் பாதிக்கப்பட்டு உள்ளது என்றும் இதற்கு தீர்வு கூறுங்கள் என கேட்டு மனு செய்துள்ளார்.

<u>எதிர்மனுதாரரின் பதிலுரை</u> :

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப எண் 2000715408231247 கொண்ட விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள புல எண். 566/8, 566/9 ஆனது கிணறு அமைந்துள்ள இடத்திலிருந்து தொடர்ச்சியாக இல்லை என்பதால் வாரிய விதிப்படி 50 சென்ட்டுக்கு குறைவாக பாசன நிலம் உள்ளதால் விவசாய மின்னிணைப்பு வழங்க இயலாது. எனவே மனுதாரரின் விண்ணப்ப எண்: 2000715408231247 கொண்ட விவசாய விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

<u>விவாதங்கள்:</u>

மனு தொடர்பான விசாரணை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மேற்பார்வைபொறியாளர் அலுவலகம், பார்வதிபுரம் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டு 20.01.2024 அன்று கேட்புரை நடத்தப்பட்டது. அதில் மனுதாரர்

மற்றும் மின் பகிர்மானம் சார்பாக செயற்பொறியாளர் தக்கலை ஆகியோர் உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. அதில் மனுதாரர் மற்றும் மின் பகிர்மானம் சார்பாக செயற்பொறியாளர் தக்கலை அவர்கள் கலந்துகொண்டு அவருடைய வாதங்களை எடுத்துரைத்தனர் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மன்றத்தில் கலந்து கொண்ட மனுதாரர் விவசாய மின்னிணைப்பு கேட்டு விண்ணப்பித்த விண்ணப்பத்தை பரிசீலணை செய்யாமல் ரத்து செய்ததாகவும் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் கேட்கப்பட்டதில் தேவையான 50 சென்ட் இல்லாத காரணத்தால் வழுங்கவில்லை ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படவில்லை என்றும் ஆனால் மனுதாரருக்கு 75 சென்ட் இடம் உள்ளது என்றும் தொடர்ச்சியாக 40 சென்டும் ஒரு இடம் தாண்டி 35 சென்ட் இடம் உள்ளது என்றும் சரியான காரணம் கூறாமல் ரத்து செய்துள்ளனர் என கூறியுள்ளார் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மன்றத்தில் கலந்து கொண்ட மின்பகிர்மானம் சார்பாக செயற்பொறியாளர்/ தக்கலை களஆய்வு செய்த போது தொடர்ச்சியாக 50 சென்ட் பாசன நிலம் இல்லாத காரணத்தால் வாரிய விதிகளின்படி ரத்து செய்யப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

***மன்றத்தின் தீர்வு :***

*மனுதாரர் மற்றும் மின் பகிர்மானம் சார்பாக செயற்பொறியாளர் தக்கலை அவர்களின் வாதங்களை கேட்டறிந்ததில் மனுதாரர் மனு தொடர்பாக ஆவணங்கள் இருப்பின் வழுங்கலாம் என்றும் அதன்படி 3 தாள்கள் தரப்பட்டுள்ளது. எனினும் Tamilnadu Electricity Distribution Codes and Sub Regulations 29 (2) (b) தெரிவிக்கப்பட்டுள்ள.*

*"Within a survey field number or in a sub-divided field number, a person shall be given one agricultural service connection to each well/bore well subject to the condition that the wells/bore wells are independent and physically separated from each other and the minimum extent of land to be irrigated from each well/bore well shall be 0.5 acre" -ன் படி தொடர்ச்சியாக 50 சென்டிற்கு குறைவாக*

*உள்ள விவசாய நிலத்திற்கு மின்னிணைப்பு வழுங்க இயலாததால் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது. எனவே இம்மனு மீது நடவடிக்கை தேவையில்லை என இம்மன்றம் கருதுகிறது.*

*ஆணை:*

*மனுதாரர் மனு தொடர்பாக Tamilnadu Electricity Distribution Codes and Sub Regulations 29 (2) (b)-ல் குறிப்பிட்டுள்ள வாரியவிதிகளின்படி குறைந்த பட்சம் 50 சென்டு பாசன நிலம் தேவை என்பதால் மின்னிணைப்பு வழுங்க வழிவகை இல்லை என இம்மனு முடித்து வைக்கப்படுகிறது."*

6.7 கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வாயிலாக மேற்கூறிய ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னரும் மனுதாரர் மேல் முறையீடு புகார் அளித்துள்ளதாகவும், மனுதாரர் online மூலமாக விண்ணப்பித்ததால் எந்தவிதமான ஆவணங்களும் எதிர்மனுதாரர் அ லுவலக கோப்புகளில் இல்லை எனவும் மேற்கூறிய விண்ணப்பம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் செ.வெ.எண் 1/2020 நாள் 10.09.2020–ன்படி தொடர்ச்சியாக 50 சென்டு பாசன நிலம் இல்லாத காரணத்தினால் ரத்து செய்யப்பட்டது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 திரு.இராஜகுமார். வெள்ளிச்சந்தை. என்பவருக்கு குருந்தங்கோடு, B கிராமத்தில் resurvey No;566/23B 20.501 cent 565/8B 20.007cent ம் 566/80ல் 22.23 cent ம் உள்ளது எனவும், Resurvey No;566/23Bம் மற்றும் 565/8B ஆகிய இரு இடங்களும் தொடர்ச்சியாக பக்கத்தில் உள்ளது எனவும், 566/8என்ற இடத்திற்கு இடையில் 566/19, 20 ஆகிய இரு இடங்கள் sub–division படி வேறு ஆளுக்கு உள்ளது ஆகும் எனவும், அவர்களிடம் நேரடியாக விசாரித்தபோது இவர்களுக்கு தண்ணீர் கொண்டுசெல்ல அனுமதிக்கமாட்டோம் என்றும் கூறிவிட்டார்கள் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேல்முறையீட்டாளருடைய Borewell 566/23Bல் உள்ளது எனவும், இந்த இடத்தில் 566/23B மற்றும் 565/8B ஆக(20.501 + 20.007) 40.508 cent தான் உள்ளது எனவும், TNERC–ன் படி தொடர்ச்சியாக குறைந்த அளவு 0.5ஏக்கர் நீர்பாசன நிலம் இல்லாத காரணத்தால் தான் அவருடைய விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

7.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய தகுதியான சாதாரண விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்ப எண் . 2000715408231247 நாள்: 20/08/2023 தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பித்த நிலையில் புதிவு செய்யாமல் தவறாக கையாளப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

7.2 மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் அளித்த ஆணையி ல் மின்சாரம் வழங்க வழிவகை இல்லை என்று கூறியுள்ளதாகவும் ஆனால் ஆணையில்

குறிப்பிட்டுள்ள விதியின் படி தனது விண்ணப்பம் தகுதியானது தான் எனவும் அதில் தெளிவாக 50 சென்ட் பாசன நிலம் தேவை என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தனக்கு அதற்கும் அதிகமான அளவு விவசாய நிலம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடம் கோரப்படும் நிவாரணம் கீழ்க்கண்டவாறு:

1. வேளாண் மின்சாரம் பெற தகுதியான தனது விண்ணப்பத்திற்கு உடனே –மின்சாரம் வழங்க வேண்டும்.
2. தனது விண்ணப்பம் போல் எந்த ஒரு விண்ணப்பமும் இனி வரும் காலங்களில் தவறாக ரத்து செய்யப்படாமல் இருக்க உறுதி செய்ய வேண்டும்.
3. தவறாக பணி செய்து விண்ணப்பத்தை ரத்து செய்த அதிகாரிகளுக்கு துறை ரீதியான உரிய பயிற்சி அளிக்க வேண்டும்.
4. தனது விண்ணப்பம் தவறாக ரத்து செய்யப்பட்டதால் தனக்கும் தனது குடும்பத்திற்கும் தேவை இல்லாத கால விரயம், பண விரயம், மன உளைச்சல் மற்றும் பயிர்கள் பாதிக்கப்பட்டு உள்ளது. இவற்றை எல்லாம் சரி செய்ய இயலுமா? விரயமான காலத்தை திருப்பி தர இயலுமா? பாதிக்கப்பட்ட பயிர்களை சரி செய்ய தான் இயலுமா? இவற்றிற்கு எல்லாம் உங்களால் என்ன நிவாரணம் வழங்க இயலும்? தனது விண்ணப்பத்திற்கு என்ன தான் முழுமையான தீர்வு?
5. விண்ணப்பம் (விண்ணப்ப எண் 200715408231247) நிராகரிக்கும் போது அதற்கு உரிய காரணம் இல்லாமல் மற்றும் தவறான காரணம் கூறி நிராகரிப்பது முறையல்ல. ஆகவே அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

7.3 மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆணையில் Tamilnadu Electricity Distribution Code and Sub Regulations 29(2)(b)ல் குறிப்பிட்டு உள்ள விதிகளின் படி குறைந்த பட்சம் 50 சென்ட் பாசன நிலம் தேவை என்பதால் மின் இணைப்பு வழங்க வழிவகை இல்லை என்று கூறப்பட்டுள்ளது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4. மேல்முறையீட்டாளர் தனது விவசாய நிலத்தின் மொத்த அளவு 75 சென்ட் ஒரே சர்வேயில் 50 சென்ட்க்கு அதிகமான நிலம் உள்ளது எனவும், மேற்கூறிய விதியின்படி குறைந்த பட்சம் 50 சென்ட் பாசன நிலம் தேவை, அதில் எந்த ஒரு இடத்திலும் நிலம் தொடர்ச்சியாக தான் இருக்க வேண்டும் என்று கூறப்படவில்லை எனவும், ஆகவே தனது விண்ணப்பம் மேற்கூறிய விதியின்படி வேளாண் மின்சாரம் பெற தகுதியானது எனவும், மன்றத்தின் ஆணை மேற்கூறிய விதிகளுக்கு உட்படாமல் உள்ளது எனவும், ஆகவே உடனே மின்சாரம் வழங்க உத்தரவிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

7.5. மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறை தீர்ப்பு மன்றத்தில் 18-12-2023ல் புகார் அளித்ததாகவும், அதன் ஆணையில் மேற்கூறிய RTI ல் குறிப்பிட்ட PR.NO: 1/2020 dt:10.09.2020 காரணம் கூறாமல் புதிதாக Tamilnadu Electricity Distribution Code and Sub Regulations 29(2)(b)ல் குறிப்பிட்டுள்ள விதிகளின் படி குறைந்த பட்சம் 50 சென்ட் பாசன நிலம் இல்லை என்றும் இது எப்படி சாத்தியம்? விண்ணப்பம் ரத்து செய்யும் போது எந்த ஒரு காரணமும் பதிவு செய்யப்படவில்லை, RTI மனுவிற்கு ஒரு காரணம் பதிலாக, ஆணையில் வேறு ஒரு காரணம் இதற்காக தான் காரணம் பதிவு செய்யப்படாமல் விண்ணப்பம் ரத்து செய்யப்படுகிறதா? இப்படி தான் காரணம் நேரத்திற்கு நேரம் இடத்திற்கு இடம் மாறுபடுமா என்று தெரிவித்துள்ளார் . ஆகவே வேளாண் மின்சாரம் வழங்க உத்தரவிட வேண்டுகிறேன் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப எண் 2000715408231247 கொண்ட விண்ணப்பத்தில் கிணறு அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள புல எண்.566/23B ஆகும் மற்றும் நிலங்கள் உள்ள புல எண்கள் 566/8, 566/9 ஆனது கிணறு அமைந்துள்ள இடத்திலிருந்து தொடர்ச்சியாக இல்லை என்பதால் வாரிய விதிப்படி 50 சென்ட்டுக்கு குறைவாக பாசன நிலம் உள்ளதால் விவசாய மின்னிணைப்பு வழங்க இயலாது. எனவே களஆய்வு செய்த போது தொடர்ச்சியாக 50 சென்ட் பாசன நிலம் இல்லாத காரணத்தால் வாரிய விதிகளின்படி மனுதாரரின் விண்ணப்ப எண்: 2000715408231247 கொண்ட விவசாய விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேற்கூறிய வாத பிரிதிவாத அடிப்படையில் சாதாரண விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பதிவு செய்ய அக்காலக்கட்டத்தில் நடைமுறையில் உள்ள தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்பகிர்மான விதி அறிவிக்கை எண் .த.மி.ஒ.ஆ/மின்.ப.வி.தொ/8–27 நாள்: 16–07–2020 கடித.எண்.த.மி.ஒ.ஆ/சட்டம்/1960/2020 நாள்: 20–07–2020 (Lr.No.TNERC/Legal/2690/D.No.1298/2020)-ஐ மற்றும் Notification No.TNERC/DC/8–29, dated 02–09–2023-ஐ ஆராய விரும்புகிறேன் . அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

***27. மின் ஆற்றல் வழங்கலுக்கான கேட்புகள்:***

*(அ) வேளாண்மை வகையின மின் வழங்கலுக்கு பின்னிணைப்பு – III இல் உள்ள படிவம் –2 இல் விண்ணப்பத்தை தர வேண்டும். வேளாண்மை வகையினத்தைப் பொறுத்தவரையில் (சட்டத்தின் 86 ஆம் சட்டப்பிரிவில் உள்ள துணைப்பிரிவு (4 இன்படி ) இப்பொருள் தொடர்பாகத் தேசிய மின்சாரக் கொள்கை வழிகாட்டுதலையும், சட்டத்தின் 108 ஆவது சட்டப்பிரிவில் உள்ள துணைப்பிரிவு (1) இன்படி, மாநில அரசு பொதுமக்கள் நலங்கருதி வெளியிடும் கொள்கை நெறிகாட்டுதலையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.*

*ஆ) விண்ணப்பம் முறைப்படியானதாக இருக்கும்போது, அது பதிவு அலுவலரால் வரிசை கிரம எண்ணோடு பதிவு செய்தல் வேண்டும் மற்றும் விண்ணப்பதாரரிடமிருந்து எழுத்து வடிவில் உரிய முறையிலான ஒப்புகையைப் பெற்று அவர் வரிசை கிரம எண்ணோடு பதிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை விண்ணப்பதாரருக்குத் தெரிவித்தல் வேண்டும்.*

***xxx***

***படிவம் 2***

***வேளாண் மின் இணைப்பு விண்ணப்ப படிவம்***
***(ஒழுங்குமுறைவிதி 27(2) பார்க்க)***

| | |
|---|---|
| *பெறுநர்* | *அலுவலக உபயோகத்திற்கு மட்டும் :* |
| | *பதிவு எண் :* |
| *குறிப்பிட்ட பதவிப் பொறியாளர்* | *பதிவுத் தேதி :* |
| *குறிப்பிட்ட பதவி பொறியாளரின்* | *பதிவுக் கட்டண ரசீது எண். :* |
| *அலுவலக முகவரி* | *மற்றும் தேதி :* |
| | *வரைவு காசோலை எண். :* |
| | *மற்றும் தேதி :* |
| | *பதிவு செய்யும் அதிகாரியின் :* |

*கையொப்பம் :*

*1. விண்ணப்பதாரர்(கள்) பெயர்(கள்) தந்தை பெயருடன் / பெயர்களுடன் (விண்ணப்பதாரர்(கள்) பாஸ்போர்ட் அளவு புகைப்படம்(ங்கள்) இணைக்கவும் :*

*2. விண்ணப்பதாரர்(கள்) முகவரி(கள்) அஞ்சல் குறியீடுடன் :*

*3. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி / கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி (இருப்பின்) :*

*4. xxx*

*5. xxx*

*6. xxx*

*7. xxx*

*8. அ. நிலத்தின் /புல எண் / புல எண்கள் (ஒன்றுக்கு மேற்பட்ட புல எண்கள் இருந்தால்)இருந்தால் நிலம் தொடர்ச்சியாக உள்ளதா?*

*ஆ. நிலம் தொடர்ச்சியாக உள்ளதா? : ஆம்/இல்லை*

*இ. இல்லையெனில், தடையில்லா சான்று / வழித்தட அனுமதி இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்*

*ஈ. மின் இணைப்பு கோரும் கிணறு / ஆழ்குழாய்க் கிணறு உள்ள நில புல எண். :*

*உ. பாசனம் செய்வதற்கான நிலப்பரப்பு (குறைந்த பட்சம் 0.5 ஏக்கர்) :*

*ஊ. கிராமத்தின் பெயர் :*

*எ. வட்டத்தின் பெயர் :*

*ஏ. மாவட்டத்தின் பெயர் :*

*9. அரசுத் துறையின் தடையில்லாச் சான்று தேவைப்படுகிறதா : ஆம் / இல்லை*

*ஆம் எனில், தடையில்லாச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்*

*10. அ. விண்ணப்பத்திருக்கும் நிலத்தில் வேறு கிணறு உள்ளதா? : ஆம் / இல்லை*

*ஆ. ஆம் எனில் , அந்தக் கிணற்றில் மின் இணைப்பு உள்ளதா ? : ஆம் /இல்லை*

*இ. ஆம் எனில், மின் இணைப்பின் விவரங்கள்*

*பெயர் :*

*மின் இணைப்பின் எண், நில புல எண். மற்றும் மின் பகிர்மானம் :*

*மோட்டார் பம்புசெட்டின் குதிரைத்திறன், வீதப்பட்டியல் பிரிவு அலுவலகம் :*

*xxxx*

*29. மின்னிணைப்பு தொடர்கள்:*

*(2) (ஆ) கிணறுகள் / ஆழகுழாய்க் கிணறுகள், தனித்தனியாக வெவ்வேறு இடத்தில் அமைந்துள்ள நிலையில் , ஒவ்வொரு கிணற்றிலிருந்தும் / ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்தும் நீர்பாசனம் செய்ய வேண்டிய நிலத்தின் பரப்பளவு குறைந்தது 0.5 ஏக்கராக இருக்கும் பட்சத்தில், ஒரு நில அளவை புல எண்ணில் அல்லது பிரிக்கப்பட்ட ஒரு புல எண்ணில் , ஒரு நபருக்கு ஒவ்வொரு கிணற்றிற்கும் / ஆழ்குழாய் கிணற்றிற்கும் ஒரு வேளாண் மின் இணைப்பு வழங்கலாம்.*

7.8 மேற்கூறிய விதிகளை ஆராயும்பொழுது ஒரு தனி நபர் சாதாரண விவசாய மின்இணைப்பு கோரும் பட்சத்தில் அவருடைய கிணற்றிலிருந்து 0.5 ஏக்கர் நிலத்திற்கு நீர்பா சனம் செய்து விவசாயம் செய்யும் அளவிற்கு நிலம் இருக்க வேண்டியது என்பது தெரிய வருகிறது . மேலும், 0.5 ஏக்கர் நிலங்கள் தொடர்ச்சியாக இல்லாத பட்சத்தில் , தடையில்லா சான்று மற்றும் வழித்தட அனுமதியுடன் படிவம் 2ல் கூறப்பட்டுள்ளபடி இணைத்து விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிய வருகிறது.

7.9 ஆனால் மேல்முறையீட்டாளர் தன்னுடைய ஒரு சர்வே எண்ணில் 0.5 ஏக்கர் நிலம் இருந்தும் தன்னுடைய விண்ணப்பம் பதிவு செய்யப்படவில்லை என்ற முறையீடு அவர் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் சர்வே எண்.566/23B மற்றும் 565/8B ஆக (20.501 + 20.007) 40.508 cent மற்றும் தொடர்சியாக இல்லாமல் வேவ்வேறு சர்வே நம்பர்களில் 566/8, 566/9 35 cent நிலம் இருப்பதும் தெரியவருகிறது . மேலும், ஆழ்துளை கிணறு தற்சமயம் சர்வே எண்.566/23B இருப்பதும் தெரிய வருகிறது. இந்நிலையில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய ஒரே சர்வே நம்பரில் 50 cent நிலம் உள்ளது என்ற வாதம் நிராகரிக்கப்படுகிறது.

7.10 மேலும், விவசாய மின்இணைப்பு வழங்க படிவம் 2ன் படி அவர் நிலம் தொடர்ச்சியாக இல்லாததால் அவருடைய நிலங்களுக்கிடையே 566/19, 20 ல் வேறு உரிமையாளருக்கு இருப்பதும் அறிய முடிகிறது . எனவே, அவர்களிடமிருந்து படிவம் 2ல் கூறப்பட்ட படி நீர்பாசனம் செ ய்ய தடையில்லா சான்று/வழித்தட அனுமதி இணைக்கப்பட்டதா என்று கேட்புரையில் வினவியபொழுது மேல்முறையீட்டாளர் அதை இணைக்கவில்லை என்றும் அதை இணைக்குமாறும் எதிர்மனுதாரர் அறிவுறுத்தவில்லை என்றும் வாதிட்டார்.

7.11 எதிர்மனுதாரர் தனது களஆய்வின்பொழுது, மேல்முறையீட்டாளருக்கு அவருடைய நிலம் தொடர்ச்சியாக நீர்பாசனம் செய்ய 0.5 ஏக்கருக்கு வழிதடம் இல்லாததையும், அவருடைய நிலத்திற்கு அருகிலுள்ள 566/19, 20ன் உரிமையாளரிடமிருந்து தடையில்லா சான்று பெற்று தர தெரிவித்தாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்தார் . கேட்புரையின் பொழுது மேல்முறையீட்டாளரிடம் தாங்கள் தடையில்லா சான்று பெற்று தர முடியுமா என்று கேட்ட பொழுது அவர் பதில் அளிக்கவில்லை.

7.12 மேலும், மேல்முறையீட்டாளர் தனது தொடர்ச்சியாக இல்லாத நிலங்களுக்கு ஒரு பொது வாய்கால் மூலம் இணைப்பு இருப்பதால் அதன் வழியே நீர்பாசம் செய்ய குழாய் அமைக்க இயலும் என்று தெரிவித்தார் . ஆனால், எதிர்மனுதாரரோ அந்த வாய்க்கால் மற்ற விவசாய நிலங்களுக் கு செல்லும் நீர் வழி பாதையாகும் எனவும் , அதில், மேல்முறையீட்டாளர் தன் னிச்சையாக குழாய் அமைப்பதாக வாதிடுவது உரிய அரசு நிர்வாகத்திற்கும் மற்றை ய பயனீட்டாளருக்கு தெரியாமல் செய்யும் நிலையாக கரு துவதால் அந்த வாதத்தை ஏற்றுகொள்ள இயலாது என்று வாதிட்டார். எதிர்மனுதாரரின் நிலைப்பாடு சரி என்று தான் கருத இயலும்.

7.13 ஆகவே, மேற்கூறிய வாதங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய விவசாய நிலங்களுக்கு கு றைந்த பட்சம் 0.5 ஏக்கருக்கு நீர்பாசனம் செய்ய வழிதடம் இன்றி விண்ணப்பித்தது உறுதியாகிறது . அது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்பகிர்மான விதி 29(2)(ஆ)ல் கூறப்பட்டதற்கு எதிராக உள்ளது . அதாவது மேல்முறையீட்டாளர் தனது தொடர்ச்சியான சர்வே எண் .566/23B மற்றும் 565/8B ஆக( 20.501 + 20.007) மூலம் 40.508 cent நிலத்திற்கே நீர் பாச னம் செய்ய முடியும் என்பதும் நிரூபனமாகிறது.

7.14 எனவே, இந்நிலையில் மேல்முறையீட்டாளரால் விவசாய மின்இணைப்பு கேட்டு விண்ணப்பித்த விண்ணப்ப எண்ணை 00715408231247 ரத்து செய்த எதிர்மனுதாரரின் செயல் தவறு என்று வாதிட்டது நிராகரிக்கப்படுகிறது . மேலும், விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் இரத்தானதால் பயிர்கள் பாதிக்கபட்டது என்ற வாதம் பொருந்தாத வாதமாக இருக்கிறது . சாதாரண

விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் தற்சமயம் 31.03.2013 வரை பதிவு செய்யப்பட்டவர்களுக்கு தமிழக அரசின் இலக்கு வெளியீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டதாக தெரியவருகிறது . ஆகவே, 20–08–2023ல் தற்சமயம் உரிய ஆவணங்களின்றி பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தில் பயிர் பாதிக்கபடும் என்று வாதிடுவது பொருந்தாத நிலையே தான் எடுத்துக்காட்டுகிறது . ஆகவே, இந்த எந்த வித சேவை குறைபாடும் இல்லை என்பதால் மேல்முறையீட்டாளரின் நிவாரணம் கோரும் கோரிக்கைகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

7.15 ஆகவே, மேல்முறையீட்டாளரின் விவசாய மின்இணைப்பு விண்ணப்பத்தை ரத்து செய் த எதிர்மனுதாரின் செயல் சரியே என்று முடிவு செய்யப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் வேளாண் மின்இணைப்பு பெறும் நிலங்களில் நீர்பாசனம் செய்ய 0.5 ஏக்கருக்கு உறுதி செய்து உரிய தடையில்லாத சான்று உரிய நபர் / அரசு அலுவலரிடமிருந்து பெறப்பட்டு மீண்டும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது.

**8.0 முடிவுரை:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளரின் விவசாய மின்இணைப்பு நீர் பாசனம் செய்ய தற்சமயம் 0.42 ஏக்கர் நிலத்திற்கு மட்டும் தொடர்ச்சியாக இருப்பதாலும் அதன் தொடர்ச்சி இல்லாத நிலங்களுக்கு நீர் பாசனம் செய்ய வழித்தட அனுமதிக்கான தடையில்லா சான்று இல்லாமல் விண்ணப்பித்த நிலையில் அவ் விண்ணப்பத்தை ரத்து செய்த எதிர்மனுதாரின் செயல் சரியே என்று முடிவு செய்யப்படுகிறது . மேலும், மேல்முறையீட்டாளர் நீர்பாசனம் 0.5 ஏக்கருக்கு செய்யும் முறையில் உரிய தடையில்லாத சான்று உரிய நபர் / அரசு அலுவலரிடமிருந்து பெறப்பட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 20/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

**பெறுநர்**

1. திரு.S.ராஜ்குமார் – By RPAD
எண்.13/84, கொடுப்பைக்குழி,
கட்டிமாங்கோடு அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629801.

2. செயற்பொறியாளர்/ இ&ப/தக்கலை,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நாகர்கோவில் பார்வதிபுரம்,
நாகர்கோவில் – 629 003.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம்,
நாகர்கோவில் – 629 003.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.